# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 26

(உறுப்பினர்களுக்கு மட்டும்) இ. ம. இ. பதிவு: 135/83

## இந்து மதத் தந்தையின்

**இராமலிங்கரியலும், இராமகிருட்டிணரியலும்**

(THE RAMALINGARISM AND THE RAMAKRISHNARISM)

—புதிய கண்ணோட்டம்



குவலய குருபீடம் — ஞாலகுரு சித்தர் கருவூரர்
12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி

காணிக்கை: ரு. 1-00 வெளியீடு: 26—2—86

# சித்தர் நெறியும், சாதி, இன, மொழி வெறிகளும்

இன்றுள்ள இந்துக்களில் 100-க்கு 99 பேர்களுக்கு மெய்யான இந்து மதம் என்ற ஒன்று இருப்பது தெரியாது! தெரியாது! தெரியாது! எனவே இன்றைக்கு நாட்டு நடப்பில் உள்ள சாதி, இன, மொழி வெறிகள் மெய்யான இந்து மதமான சித்தர் நெறிக்குரியவை அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல! இந்தக் கருத்தை நம்மவர்கள் நன்குபுரிந்து கொண்டால்தான் பிருமணர்களாலும் சமசுக்கிருதத்தாலும் மெய்யான இந்துமதம் கெடுக்கப்பட்டே போலியான ஹிந்து மதம் உருவாக்கப்பட்டது. அல்லது போற்றிப் பேணி வளர்க்கப்பட்டது என்ற பேருண்மை தெளிவாகிடும்.

சாதி வேற்றுமைகளும், உயர்வு தாழ்வுகளும், தீண்டாமைக் கொடுமைகளும், சாதிகளனைத்தும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு காக்கப்பட்டேயாக வேண்டும் என்ற கருத்தும் இன்றுள்ள போலியான ஹிந்துமதத்தில்தான் இருக்கின்றன! இருக்கின்றன! இருக்கின்றன! மேலும் இன்றுள்ள போலியான ஹிந்து மதத்தின் தலைவர்களாக உள்ள பிருமண ஆச்சாரியார்களும், மடாதிபதிகளும், பீடாதிபதி -களும், சன்னிதானங்களும், மேற்படி சாதி, மத, இன, மொழி வேற்றுமைகளை தூண்டுகிறவர்களாகவும், போற்றிப்பேணி வளர்ப்பவர்களாகவும் உள்ளார்கள்.

மெய்யான இந்து மதம் தான் இன்றுள்ள அனைத்து வகையான மதங்களுக்கும் மூலமாகவும் தாயாகவும் இருக்கின்றது. அதாவது, சித்தர் நெறியெனும் மெய்யான இந்துமதம் தான் இம்மண்ணுலகில் தோற்றுவிக்கப்பட்ட முதல் மதம். எனவே இதில் மாற்று மதங்களின் மீது பொருமையோ, போட்டியோ, வெறுப்போ, வெறியோ....... பிறந்திருக்கவே இயலாது! இயலாது! இயலாது! இயலவே இயலாது! மேலும், மனித இன வகைகளும், மொழி வகைகளும், சாதிவகைகளும் தோன்றியிராத ஓர் ஆரம்பக் காலத்தில் பிறந்ததுதான் இந்த மெய்யான இந்துமதம் என்பதால்; இதில் இனவெறியோ மொழிவெறியோ, சாதிவெறியோ பிறந்திருக்கவே முடியாது முடியாது முடியாது முடியவே முடியாது.

இந்து மதத்தைத் தோற்றுவித்த பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் விண்வெளியிலிருந்து வந்த 48 வகை வழிபடு நிலையினர்களும் இவர்களைச் சார்ந்தவர்களும் இம் மண்ணுலகில் தோன்றிய அனைத்து வகையான மனித இனங்களோடும் இரண்டறக் கலந்து வாழ்ந்தே அருளுலக வாரிசுகளை வாழையடி வாழையாகத் தோற்றுவித்திருக்கிறார்கள். எனவே, மெய்யான இந்துமதத்தின் காவலர்களுக்குச் சாதி, மத, மொழி, இன வேறுபாடுகள் கிடையவே கிடையாது, கிடையாது, கிடையாது.

பதினெண் சித்தர் பீடாதிபதிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் தொழிலின் அடிப்படையில் அல்லது சித்திநிலையின் அடிப்படையில் தங்களை பிள்ளை, குருக்கள், பண்டாரம், ஓதுவார், தேசிகர், பூசாறி, பட்டர், தீட்சதர், அந்தணர், வேதியர், நாயக்கர், தேவர், மறவர், கள்ளர், அகம்படியர், விழுப்பறையர், அறையர், ஆசாறி, ஆச்சாரி.........என்று பல பெயர்களால் குறித்துக்கொள்ளுகிறார் -கள். எனவே, இவைகள் எல்லாம் சாதிப் பெயர்கள் அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல!

சாது + ஆதி —> சாதி

சாதனை புரிந்தவர்களே சாதுக்கள்

ஆகவே, சாதுக்கள் எனப்படும் குறிப்பிட்ட சான்றோர்களின் வழிவந்தவர்களே தங்களைக் குறிக்கும் சொற்களாக உருவாக்கிக் கொண்டவைதான் இன்றுள்ள சாதிப் பெயர்கள். இதன்படிப் பார்த்தால் சாதிகளுக்கு இடையில் உயர்வு தாழ்வோ, ஏற்றத் தாழ்வு வெறியோ, தீண்டாமைக் கொடுமையோ, உருவாவதற்கு இடமே இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! பிறமண்ணினரான பிருமணர்கள் இந்தச் சாதியெனும் பொருளாழமிக்க அழகிய தமிழ்ச் சொல்லை ஜாதி என்ற தங்களின் சமசுக்கிருதச் சொல்லால் மூடிமறைத்ததால்தான் அனைத்து வகையான வெறிகளும் பிறந்தன. எனவே மெய்யான இந்துமதத்துக்குச் சாதி, மத, இன, மொழி, வெறி இல்லை இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

# விநாயகர் - விக்னேசுவரர் - கணபதி - பிள்ளையார்

-ஞால குரு

1. **காணபதம்:** கணபதியையே பரம்பொருளாக வழிபடும் மதம் காணபதர்கள் இவர்கள்.

(a) கணபதி மூலாதார சத்தி உருவினர்

(b) பிரணவம் என்ற ஓங்கார வடிவத்தையே குறிக்கும்

2. I **கணபதி** என்ற பெயருக்குத் தத்துவ விளக்கம்

(a) க = மனோவாக்குகள்; மனநிலை, வாக்குநிலை

(b) ண = இவை கடந்தநிலை

இவ்விரண்டு நிலைகளுக்கும் (a), (b) தலைவனாக 'ஈசனாக' இருப்பவரே **'கணேசன்'**

**II கணபதி**

(a) க — அறிவு (b) ண — வீடு

இவ்விரண்டால் அறிவுக்கும், வீட்டுக்கும் (அருளுக்கும்) தலைவன் (பதி) **கணபதி**

3 **வக்ரதுண்டர்** - கொடிய மாயைகளைத் துண்டிப்பவர்;- கேடுகளைத் தடுத்து அகற்றி நலமளிப்பவர்

4 **'இலம்ப உதரர்'** - பெரிய வயிறர், அதாவது அனைத்து வகையான பிரபஞ்சங்களையும் தனது வயிற்றுள் அடக்கியிருப்பவர்

5. கணபதி உண்ணும் மோதகம் (கொழுக்கட்டை) இது கணபதியின் அன்பிற்குரியவராகின்றவர்கள் இனிய சுவையுடைய இன்ப வாழ்வை பெறுவர் என்பதை குறிக்கும்.

6. கணபதியின் வாகனமான (மோசிகம்) மூஞ்சுறு.

இதன் பொருள் — நமக்குள் இருந்து நம்மை அழிக்கும் திருட்டுத் தனமான, கள்ளத்தனமான, மாயமான, பேராசையெனும் உலகப்பற்றுகும், இதனை அடக்கி காப்பவரே கணபதி.

7. (a) கணபதி தமிழகத்தில் திருமணமாகாதவர். பிறம்மச்சாரி என்று குறிக்கப்படுகிறார், ஆனால் அவருக்கு சித்தி, புத்தி என்று இரண்டு மனைவிகள் உண்டு. இவர், -சத்தி கணேசன் எனப்படுவார்

(b) கணபதி வல்லபை என்ற ஒரே ஒரு மனைவியோடு பீடத்தில் அமர்ந்திருப்பார் அவரது மடிமேல் வல்லபை அமர்ந்திருப்பார் என்பதால் இவருக்கு வல்லபை கணபதி என்று பெயர் கணபதிக்கு சேமம், இலாபம், அதாவது நலம், ஈட்டம் அல்லது சுகம் வருவாய் என்ற பெயரில் இரண்டு மகன்கள் உண்டு

8. (a) தென்னாட்டில் சித்தி புத்தி விநாயகர் ஆலயங்கள் பல உள்ளன. இவை. விநாயகருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்பதனை விளக்குகின்றன.

(b) தஞ்சை, திருவாலமலையில் உள்ள கோயிலில் சத்தி கணேசர் என்று தனி பீடத்தில் அமர்ந்திருக்க சித்தி, புத்தி என்ற இரண்டு மனைவிகள் தனித்தனி பீடங்களில் நிற்கின்றனர். இந்த மூன்று சிலைகளும் ஒன்றாக வைத்து தான் வழி படப்படுகிறது. எனவே, கணேசருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்பது விளங்குகிறது.

9. இது தவிர ஐந்து தலை கொண்டு சிங்கத்தின் மேல் விளங்கும் ஹேரம்ப கணபதி, பாலகணபதி, ஊர்த்துவ கணபதி முதலிய மூர்த்திகளும் உண்டு.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# அன்புள்ளச் சேவுகனுக்கு!

அன்புச்சேவுக!

1. நீ, இந்தியத் துணைக்கண்டத்து ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் ஒட்டு மொத்த மாநாட்டில் கலந்து கொள்ள தில்லி மாநகர் சென்றிருக்கிறாய். உன் அனுபவம் தெற்கேயும் வடக்கேயும் ஒப்புநோக்கச் செய்திடும். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களிடையே வறுமையும் பற்றுக்குறையும் ஏக்க நிலையும் நோய் நிலையும் ஆதிக்கம் செலுத்தும்பொழுது; புற வாழ்க்கையைப் போல்தான் அக வாழ்க்கையும் இருண்டிருக்கும். எனவே, வழிகாட்டும் சுடராய்! கலங்கரைவிளக்கமாய்! அகவிருள் அகற்றும் அருட்பெருஞ் சோதியாய்! விளங்கவேண்டிய ஆசிரியப் பெருமக்கள் முற்றிலும் அணைக்கப்பட்ட கரிக்கட்டைகளாக இருப்பதைக் காணலாம். இதற்குமேல், கட்டிடமே இல்லாத பள்ளிகள் ஆசிரியரே இல்லாத பள்ளிகள், ஓராசிரியர் பள்ளிகள்......... என்று பெயரளவில் உள்ள பள்ளிகளுக்கும்; அப்பள்ளிவாழ் மாணவர்களுக்குமிடையேயுள்ள உறவுகளையும் உரிமைகளையும் ஆராய்ந்து புரிந்துகொள்.

2. நண்ப! தெற்கே, பள்ளிக்கூடத்துக்கே போகாத வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அருட்பாக் கொடைவள்ளல், இராமலிங்க அடிகளாரையும் கல்கத்தா காளிகோயில் பூசாரி இராமகிருட்டிணப்பரம அம்சரையும் ஒப்பிட்டு நோக்கி ஆய்வு செய்திடு. இரண்டு பேருமே ஏறத்தாழ எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளாதவர்கள்தான் இரண்டு பேருக்குமே கடவுள்கள் நேரில் தோன்றி வரமளித்தார்கள். தென்னாட்டு இராமலிங்க அடிகளாருக்கு முறையே சிதம்பரத்தில் நடனமிடும் கூத்தர்ப் பெருமான், திருத்தணிகை வாழ்முருகன், திருவொற்றியூர் வடிவுடைய மாணிக்கவல்லி...முதலியோர் நேரில்தோன்றி அனைத்துவகையான அருளையும் வழங்கினார்கள். ஆனால், வடநாட்டு இராமகிருட்டிணப்பரம அம்சருக்குக் காளிதேவி மட்டுமே நேரில் தோன்றி அருள் வழங்கினாள்.

3. இராமலிங்க அடிகளார் பிறவியிலேயே மரக்கறி உணவு மட்டுமே உண்பவர்- காலப்போக்கில் பயிற்சித் தேர்ச்சியாலும், முயற்சி முதிர்ச்சியாலும் உண்ணுவன பருகுவன அனைத்தையும் நிறுத்தி அருவுருவ அமுதத்தேகம் பெற்றார். ஆனால் இராமகிருட்டிணபரம அம்சரோ பிறவியிலேயே மீனும் கறியும் உண்ணும் பூசாறியாகப் பிறந்தவர், கடைசிவரை காளிக்கும் சுடுகாட்டுப் புதைகாட்டுத் தெய்வங்களுக்கும் தாந்தரீகப் பூசைகளுக்கும் படையலாகப் பயன்படுத்திய இறைச்சியையும் மீனையும் உணவாக உண்டே உலகியலாகச் சத்திதேவியின் வடிவமாக வாழ்ந்தவர்.

4. இராமலிங்க அடிகளார் ஈ. எறும்பு மொய்க்காத நோய் நெருங்காத பொன்வண்ண ஞான தேகம் பெற்றிட்டார். அருட்பெருஞ் சோதியாகி மறைவான இறையோடு எங்கும் நிறைந்திட்டார். இராமகிருட்டிணரோ உலகியலாக மனித தேகத்தோடு வாழ்ந்து மாண்டிட்டார்.

5. இந்த, இருவேறு அருளாளர்களையும்; தென்னாடு வடநாடு என்ற இருபெரும் நாட்டுப் பிரிவுக்கு இலக்காகக் கொண்டு விளக்கம் தேடினால்; இராமகிருட்டிணர், உலகம் முழுவதும் அறியப்பட்ட அருளாளராக நிறுவன நிர்வாக அமைப்புக்களோடு வளர்ந்துள்ளார். ஆனால், இராமலிங்க அடிகளாரோ தென்னாடு எனும் நான்கு மாநிலங்களில் மூன்று மாநிலத்தாருக்கு யாரென்றே தெரியாமலும்; தமிழ்நாட்டிற்குள்ளுள்ள (ஏறத்தாழ) இருபது மாவட்டத்தார்களில் இரண்டு மூன்று மாவட்டத்தார்களுக்கு மட்டுமே ஓரளவு தெரிந்தவராயிருக்கின்ற இரங்கத்தக்க நிலையையும் எண்ணிப் பார்த்திடுக. அப்பொழுதுதான், தமிழர்கள் எப்பொழுதுமே, தங்களுடைய மொழியையோ! இனத்தையோ! நாட்டையோ! பண்பாட்டையோ! நாகரீகத்தையோ! மதிப்பதில்லை! மதிப்பதில்லை!! மதிப்பதில்லை!!! மதிப்பதேயில்லை! விரும்புவதில்லை! விரும்புவதில்லை!! விரும்புவதில்லை!!! விரும்புவதேயில்லை என்ற பேருண்மை விளங்கிடும். அதாவது எப்படியோ தமிழர்களுக்குக் கூலிச்சிந்தையும் அடிமை நெஞ்சமும் ஏற்பட்டுத் ''தங்களுக்கு அன்னியர்கள்தான் தலைவர்களாக இருக்கவேண்டும்'' என்ற கருத்தும் விருப்பமும் ஏற்பட்டுவிட்டது. இதைத் திருத்த முற்படுபவர்களே நாம்; என்ற உணர்வில் செயல்படு பிறரைச் செயல்படுத்து.

இந்து மதத்தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்.



# எத்தனை ஐயப்பன்கள்! - 3

## —இந்துமதத் தந்தை—

சாத்தான்—> 'சார்ந்தவன்' என்ற சொல்லின் திரிபே. அதாவது [சேர்ந்தவன்—> சார்ந்தவன்] மும்மூர்த்திகளான சிவன், திருமால், பிறமண் என்ற முழுமுதற்டரம் பொருள்களைச் சேர்ந்தவனே இந்தச் சாத்தான் என்பதே பொருள். பிறமணுக்குச் சமமாகவே, நாரதர், ஐயப்பன்(ஐயனார்) என்பவர் உள்ளனர். ஐயப்பன் என்பவன் மும்மூர்த்திகளுக்குச் சமமானவன் என்ற பொருளிலேயே, அவர்களைச் சேர்ந்தவன்—> சேந்தவன்—> சேந்தன்—> அமுதன் என்ற பெயர்களும்; அவர்களைச் சார்ந்தவன்—> சாந்தன்—> சாத்தன்—> சான்றார் என்ற பெயர்களும்; இவனுக்கும் தலைமை அதிகாரம் உண்டு என்பதைக் குறிக்கும் வண்ணம் ஐயர், ஐயன், ஐயப்பன், ஐயனார்... என்ற பெயர்களும் பிறந்தன. மிகுந்த ஆற்றலையும், போர்ப்பண்பையும், காவல் திறத்தையும், முருகனைப் போன்ற சீற்றத்தையும் உடைய காவல் தெய்வமாக 'ஐயனார்' ஏற்கப்பட்டார். அல்லி, தாமரை, என்ற இரு மனைவிகளுடன் அருளாட்சிச் சேனாதிபதியாக உள்ள இவர். ஊர் எல்லைகளில் கருவறை பெற்றிட்டார்

எனவேதான், சங்ககாலத்தில்; இவர் 'புறம்பணையான்' எனப்பட்டார். சிலப்பதிகாரம், புகார் நகரில் 'புறம்பணையான் வாழ்கோட்டம்' இருந்ததைக் குறிக்கிறது. திருமணமாகாத இளைஞர்கள் அல்லது துறவிகள் சிறந்த ஐயனார் பத்தராக இருந்து முத்திபெற்றுச் சமாது வைக்கப் பட்டுக் கோயில்கள் கட்டப்பட்ட காலத்து அவை 'ஐயன் கோயில்' ஐயம்மாள் கோயில்' எனப்பட்டன. இவையே, காலப்போக்கில் 'ஐயப்பன்' கோயில்கள் என்றாயின. ஆனால், மலைமுகடுகளில், காடுகளில், மனித நடமாட்டமற்ற இடங்களில் இராமாயணக்கால சபரியின் தம்பியான ஐயப்பனை [இல்லறமற்றவன்] வழிபட்டு முத்தியாகிறவர்களின் சமாதுக்கோயில்கள் மட்டுமே ஐயப்பன் கோயில் என்பதுதான் மரபு.

பெண்கள் போகக் கூடாது. பெண்ணின்பம் துய்க்கக் கூடாது, துய்க்காத விரதம் தேவை...... என்ற கட்டுப்பாடுகள் ஐயப்பன் பூசைக்கு ஏற்பட்டதற்குக் காரணமே சபரியின் தம்பி ஐயப்பன் இல்லறமறுத்துத் தனித்துத் தவம் செய்து சமாது ஆனதுதான். சித்தர்களும், அவர்களின் இலக்கியங்களும் அவர்களுடைய சித்தர்நெறி' எனும் மெய்யான இந்து மதமும், அவர்களுடைய பிற தத்துவக் கருத்துக்களும், சித்தாந்தச் செயல் துறைகளும் இருட்டடிக்கப்பட்டதால் திரித்துக் கூறப்பட்டதால் ........ஐயப்பன், ஐயனார் என்ற மாபெரும் தனித்தன்மைகள் குழப்பப்பட்டு விட்டன, இனிமேலாவது, இக் குழப்பம் அகற்றப்பட்டாக வேண்டும், வட மொழியில்; வேட்டி —> வேஷ்டி; குட்டம் —> குஷ்ட்டம்; கடினம் —> (கட்டம்) —> கஷ்ட்டம் என்று திரிக்கப்பட்டது போல் சாத்தா —> சாஸ்த்தா ஆக்கப்பட்டது.

---

# வைகாசி மாத ஞானம் வழங்கும் பால்குடப் பெருவிழா

அமுத ஆண்டு வைகாசி மாதம் 9-ஆம் நாள் முழுநிலவு நாளன்று குருகுலத்தில் நடைபெறுகின்றது.

நாள்: 23—5—86

இடம்: சித்தர் மாநகர், காரியேந்தல்பட்டி, கொட்டாம்பட்டி - மதுரை மாவட்டம்.

இயன்றவர்கள் நிதி அனுப்பி அருளைப் பெறுங்கள். [தலைமைச் செயலாளர், C/o. காந்தி வசுத்திராலயம் கொட்டாம்பட்டி 625 103]

10. இராகவபட்டர் என்பவர் தமது சாரதா திலகம் என்ற நூலில், சத்திகள் ஐம்பத்தோரு வகை என்பதால் கணபதியும் ஐம்பத்தோரு வகைப்படும் என்று குறிக்கிறார் இருந்தாலும், சந்தான கணபதி, சுவர்ணகணபதி, நவநீத கணபதி, ஹரித்ரா கணபதி, மகா கணபதி, உச்சிட்ட கணபதி என்ற அறுவரில் மகா கணபதியும், உச்சிட்ட கணபதியும் அதிகமாக வழிபடப்படுகிறார்கள்.

11. கணபதியின் பூசைக்குரிய ஆவணிமாதம் வளர்பிறைச் சதுர்த்தியில் **பிள்ளையார் சதுர்த்தி, விநாயகர் சதுர்த்தி, கணபதி சதுர்த்தி,** என்ற **மூன்று சதுர்த்திகள்** கொண்டாடப்படுகின்றன. இவை பற்றி சித்தர்களின் வரலாறுகள் பல உள்ளன. அவற்றில் **நாட்டின் தேவைக்கும் பயனுக்கும்** ஏற்பவே 'குருதேவர்' ஏடு' மாத அறிக்கையில் வெளியிட்டிருக்கிறோம். பொருளாதார வசதி இருந்தால் பெரிய புத்தகங்களாக வெளியிடலாம்.

12. பதினெண் சித்தர்கள் படைத்த மெய்யான இந்து மதம் உலக நாகரிகங்களுக்கும், பண்பாடுகளுக்கும் மூலமாக, முதலாக, கருவாக, தோற்றுவாயாக, தாயாக இருக்கின்ற ஒன்று என்ற பேருண்மையை இந்த பிள்ளையார் சிலை உலகம் முழுதும் புதை பொருள் ஆராய்ச்சியாளர் மூலம் தோண்டியெடுக்கப்படுவதன் மூலம் அறியலாம். குறிப்பாக சப்பான், சீனா, இந்தோ சீனா, சாவா, சுமத்திரா, பார்மோசா, பர்மா, திபெத், மலேசியா, தாய்லாந்து, இலங்கை.........முதலிய பல நாடுகளில் மிகமிகத் தொன்மையான வழிபாட்டு நிலையங்களிலெல்லாம் இந்த பிள்ளையார் சிலை இடம் பெற்றிருக்கிறது ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, எகிப்து பாபிலோனியா, கிரேக்கம், மத்திய அமெரிக்கா பிரான்சு, செர்மனி.........முதலிய மேலை நாடுகளில் உள்ள அருவுருவ பீடக் கருவறைகளிலெல்லாம் அருவுருவ வடிவினரான விநாயகரின் சிலைகளே உள்ளன விநாயகர் எனப்படும் முக்கோண பீடம் தான் சிலுவையின் வடிவமாக மேலை நாடுகளில் வணங்கப்படுவதாக ஒரு குறிப்பு இருக்கிறது. அதாவது வினை + நாயகன் = விநாயகன் என்பதால் சமுதாயத்தில் நல்வினை, அல்வினை செய்து தண்டிக்கப்பட வேண்டியவர்கள் வினையின் தலைவர்கள், வினையின் நாயகர்கள் என்ற நிலையில் மாண்டிடும் தூக்கு மேடை, கொலைக்களம், சிலுவை என்ற வடிவில் உருவாக்கப்பட்டது இந்தச்சிலுவையே சொசுதிக் சின்னமாக அதாவது பிள்ளையார் சுழியாக (Z) இன்றைக்கும் இந்து மதத்தில் சிறப்பாகப் போற்றப்படுகிறது. இந்து மதத்தில் மிகவும் புனிதமாகக் கருதப்படும் இந்த சொசுதிக் சின்னம் தான் சிலுவை (+) சின்னமாக வளர்ச்சி பெற்றது என்று சித்தர்கள் நூல்கள் கூறுகின்றன.

குறிப்பு:- வேகமாக எழுதும் போது 'உ' என்று போட்டு அதன் குறுக்கே ஒரு கோடு போடு (உ) வது தான் இன்றைக்கும் மரபாக இருக்கிறது. இந்த கூட்டல் (+ PLUS MARK) குறிதான் சற்று அழகு படுத்தப்பட்டுதான் சொசுதிக் சின்னமாக (卐) காலப்போக்கில் வாழ்ந்தது, என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்திற்கு முன்பே கருத்து நிலவியதாகக் குருபாரம்பரியச் செய்தி கூறுகின்றது.

சிறப்புக்குறிப்பு:- இசுரேல் நாட்டு தேவகுமாரன் ஏசுநாதரின் மரணத்திற்கு முன்பே சிலுவைச் சின்னம் (The Cross Symbol மதிப்புக்கும் வழிபாட்டுக்கும் உரிய ஒன்றாகவே உலகெங்கும் கருதப்பட்டிருக்கிறது. ஏனெனில் இலிங்கத்தின் வரைபடமாகத் (The Sketch of The Linga, Sivalinga, Sathilinga is only the form of the Cross — His Holiness Siddhar Kaakkaiyar Mr. M. PALANISAMY PILLAI) தோன்றியது தான் சிலுவைக்குறி அல்லது அல்லது சிலுவைச் சின்னம்''........ சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை அவர்கள் இலிங்கம், சிவலிங்கம், சத்திலிங்கம் என்பனவற்றின் சுருக்க விளக்கக் குறிப்பு; (அ) கருத்து விளக்கக் குறிப்பு, (அ) வரை கோட்டுப்படம், மாதிரிப்படம் தான் சிலுவைக் குறி அல்லது சிலுவைச்சின்னம்..........'' என்று குறிக்கின்றார்.

(தொடரும்)

## 'மெய்யான இந்து மதமும் பொய்யான ஹிந்து மதமும் வரிசையில்......!...
## இராமலிங்கரியலும், இராமகிருட்டிணரியலும்.

இராமலிங்க அடிகள் காலம்: 5—10—1823 முதல் 30—1—1874 முடிய
இராமகிருட்டிணர் காலம்: 18—2—1836 முதல் 16—8—1886 முடிய

1. பதினெண் சித்தர்கள் ''அனைத்து வகையான பயிரினங்களும் உயிரினங்களும் தங்கள் தங்களின் முயற்சிகளின் முதிர்ச்சிகளாலும், பயிற்சிகளின் தேர்ச்சிகளாலும் படிப்படியாக பலப் பிறப்புக்களால் அருளாற்றலை பெற்று; அமரர் தேவர், தேவதை, தெய்வம், ஆண்டவர், இயவுள், இறை, எல்லா (அல்லா), கடவுள்......எனப்படும் 48 வகையான நிலைகளை அடைந்திடுவர்......'' என்று கூறும் தத்துவமே மெய்யான இந்து மதத்தின் அடிப்படையும் உள்ளீடும் ஆகும். இதன்படிதான் நான்கு யுகங்களாக உலகம் முழுவதும் பல்வேறு வகையான சித்தர்களும் [பதினெட்டு வகையும் 48 வகையும்) பத்தியாளர்களும், சத்தியாளர்களும், சித்தியாளர்களும், முத்தியாளர்களும், கருக்களும், குருக்களும், தருக்களும், திருக்களும், அருளாளர்களும், அருளாளிகளும், அருளாடுநாயகங்களும், மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடு நாயகங்களும், எண்வகை ஆச்சாரியார்களும், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்களும், 13 வகை குரு வழி ஆச்சாரியார்களும், 48 வகை பீடாதிபதி வழி ஆச்சாரியார்களும், தேவகுமாரர்களும, தேவதூதர்களும் மகா வீரர்களும், புத்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், அடியார்களும், .....தோன்றி வருகின்றனர். இதன்படியே சென்ற நூற்றாண்டில் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமத மறுமலர்ச்சிக்காக வளமைச் செழிச்சிக்காக, வலிமைப் பொலிவுக்காகத் தென்னாட்டில் தோன்றியவர் வடலூரா அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளார், வடநாட்டில் தோன்றியவர் இராமகிருட்டிண பரம அம்சர் ஆகிய இருவரும் ஆவர்.

2. இவர்கள் இருவருமே சாதிமத வெறிகளை வெறுத்து ஒதுக்கினர், அடக்கி ஒடுக்கிக் குறைத்திட முற்பட்டனர். அனைத்து மக்களும் சமத்துவ சகோதரத் தத்துவத்தோடு வாழப் பாடுபட்டனர். இந்து மதத்திலுள்ள அனைத்து வகையான வேற்றுமைகளையும். ஏற்றத்தாழ்வுகளையும் முழுமையாக அகற்றிடப் பாடுபட்டனர் பெண்ணடிமையை எதிர்த்தும் மறுத்தும் அறப்போர் நிகழ்த்தினர். பதினெண் சித்தர்கள் நெறிப்படி 'கடவுளைக் கண்ணால் காணலாம், கடவுளோடு பேசலாம், பழகலாம், கடவுளாகவே மாறலாம்....' முதலிய கருத்துக்களுக்கு இவர்கள் இருவருமே சான்றாகவும் ஊன்றாகவும் விளக்கமாகவும் ஆகின்றார்கள்

3 இராமகிருட்டிணர் அவர்கள் முறையாகப் பள்ளிக் கூடத்தில் இரண்டாம் வகுப்பு மட்டுமே படித்தவர், ஆனால் வடலூர் அருட் கொடை வள்ளல் அருட்பெருஞ் சோதி இராமலிங்க அடிகளார பள்ளிக் கல்விக்கே செல்லவில்லை. இப்படி இருவரும் பள்ளிக்கல்வியைப் பெறாதவர்களாக இருந்தபோதிலும் இவர்களுடைய கருத்துக்களும் செயல்களும், போதனைகளும், சாதனைகளும், வாழ்வியல்களும் அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும் படிக்கப்படுவனவாகவும், பேசப்படுவனவாகவும் மாறியிருக்கின்றன. அதாவது பதினெண் சித்தர்கள் ''சாகாக்கல்வி, மெய்ஞ்ஞானக் கல்வி, அருட்கலைகள், ஞான வாழ்வியல் பேருண்மைகள்.........முதலிய அனைத்தும் ஊழ்வினையிருப்பின் ஓதாமல் உணரலாம்'' என்று கூறும் கருத்து இவர்கள் இருவராலும் செயல் வடிவில் விளக்கப் பட்டுள்ளது. எனவே தான் இருவரையும் ஞானசித்தராக, வேதசித்தராக, நவநாத சித்தராக, இன்றைய குவலய குரு பீடம், இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் அறிவிக்கிறார். தொடர்ச்சி 10ம் பக்கம்

# திராவிட இயக்கம் என்றல் திராவிடர் கழகமல்ல!?!?

1 திராவிட இயக்கம் என்றல் இன்றைய மக்களுக்கு நாத்திக வாதமும் மதமறுப்பும், கடவுள் வெறுப்பும், ஆன்மீக வாதிகளுக்கு எதிர்ப்பும், புராண இதிகாசங்களுக்கு இழிவும், அருளுலகுக்குப் பழியும், அருளாளர்களிடத்தில் பகையும், பண்பாட்டுக்கும் நாகரீகத்திற்கும் சிறுமையும் சமுதாயக் கட்டுக் கோப்புக்களுக்கும், மரபுகளுக்கும், நடைமுறைகளுக்கும் சிதைவும்......... வழங்குகின்ற இயக்கம் என்ற ஒரு தவருன எண்ணம் இன்றைய பொதுமக்களிடம் வளர்ந்திருக்கிறது, வளர்ந்து வருகிறது இது தவறு! தவறு!! தவறு!!! இதுபற்றி உடனடியாக தமிழ்ப் புலவர்கள் அனைவரும் சமுதாய நலத் தொண்டர்களனைவரும்; மெய்யான சமயவாதிகள் அனைவரும் நேர்மையான அரசியல் வாதிகளனைவரும் கட்டாயமாகத் தேவையான விளக்கங்களை வழங்கியேயாக வேண்டும்! வழங்கியே -யாக வேண்டும்! வழங்கியேயாக வேண்டும்!

2 இன்றுள்ள திராவிடர் கழகத்தின் கண்மூடித்தனமான வெறித்தனமான எள்முனையளவு கூட பயனற்ற......... சொற்களாலும் செயல்களாலும்தான் மேற்கூறிய மாயை, மயக்கம், தவறு விளைந் திருக்கிறது, விளைந்து வருகிறது. எனவேதான் அண்மையில் தமிழர் நலம் பேணத் தள்ளாத வயதிலும் தளர்ச்சியேயின்றிக் கிராமம் கிராமமாகச் சுற்றியலைந்து திரிந்து பகுத்தறிவுப்பணியாற்றிய தமிழினத் தலைவர், சிந்தனைச் சிற்பி, சிறைக்கஞ்சாச் சிங்கம், சுயமரியாதை இயக்கம் கண்ட மாவீரர் போராட்ட உணர்வின் ஊற்று, பகுத்தறிவுப் பகலவன், வெண் தாடி வேந்தன், தன்னலம் வேண்டாத தலைவன், தமிழ்மொழி உரிமைக்காகப் போராடிய தமிழ்மொழிக் காவலர், அறியாமை இருளகற்றிய அறிவுப் பெருஞ்சுடர், மெய்யான தமிழர்களின் அறிவுத் தந்தை, அருளுலக இருளெல்லாம் அகற்ற சிந்தனைச் சுடர் பரப்பிய 64-வது நாயனர் 'சொல்லடி நாயனர்', இந்துமத மறுமலர்ச்சிக்காக ஈவு இரக்கமற்று மிகக் கடுமையான கருத்துக்களை வழங்கிய கடமை வீரர், திராவிடர் இயக்கங்களின் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மறைந்த பிறகுதான் 'திராவிடர் இயக்கங்கள்' அனைத்துமே பகுத்தறிவின் பெயரால் கடுமையான கண்மூடித்தனமான அருவருக்கத் தக்க, பிறரை புண்படுத்தக் கூடிய, அநாகரீகமான நாத்திக வாதத்தில் இறங்கியுள்ளன.

3 தந்தைப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் 'சுயமரியாதை இயக்கம்' என்ற இயக்கத்தின் பெய ரால் பிருமணர் அல்லாதவர் (Non Brahmins) உரிமை, பெருமை, கல்வி, அரசாங்க அலுவல், தன் மானம், தன்னம்பிக்கை, ஒற்றுமை, சமய சமுதாய அரசியல் அறிவு...... முதலியவைகளின் விழிச்சிக் காகவும், எழிச்சிக்காகவும், செழிச்சிக்காகவும், மலர்ச்சிக்காகவும், வலிமை மிகு ஆட்சிக்காகவுமே போராடினர்! போராடினர்! போராடினர்! எனவேதான், உலகம் முழுவதும் உள்ள பிருமணர்கள் இதற்கு எதிரிகளாகவும், விரோதிகளாகவும், பகைவர்களாகவும், செயல்பட ஒன்று திரண்டிட்டார் கள். அப்படி அவர்களை ஒன்று திரட்டுவதற்கு **ஹிந்து மதம் (பதினெண் சித்தர்களின் இந்து மதமல்ல! வட ஆரிய வேதநெறியின் அடிப்படையிலுள்ள சனதன தர்மமான சமசுக்கிருத மொழியை ஆட்சிமொழியாகப் பெற்றிட்ட ஹிந்து மதம்)** பேருதவி புரிந்தது. மேலும், இந்த ஹிந்து மதத்தின் புகழ் வாய்ந்த ஆச்சாரியார்களும் மடாதிபதிகளும், சன்னிதானங்களும், குருபீடங்களும், மதத்தலைவர்களும், புரோகிதர்களும் [சாத்திரி கள்], கோயில் அர்ச்சகர்களும் [பூசாறிகளும், குருக்கள்களும், குருமார்களும்]...... சிலந்தி வலை பின்னுவது போல் பிருமண ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் உருவாக்கினர்கள்.

[The priestly Community of the brahminical Hinduism played the main role in cultivating or creating the unity and uniformity of the Sanskritised Brahmins. Since then Mr. E.V.R. got wild and enraged against the Hinduism and priesthy mmunity. So, then he became a fanatic of the atheism and hater of th religious men and missionaries...........taken from His holiness siddhar Kakkaiyar Mr. M. Palanisamy Pillai's writings]

எனவே தான், பெரியார் ஈ வெ. ரா. அவர்கள் ''பிருமண ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டிற்கும் பாடுபட்ட இந்துமதத் தலைவர்களான சமசுகிருத வெறி பிடித்த பிருமணர்கள் மீதும், ஹிந்து மத நிறுவன நிர்வாகங்கள் மீதும், கடுமையான வெறுப்பும் மறுப்பும் எதிர்ப்பும் பகையும் கொண்டிட்டார் அதனல் அவர் 1947-க்குப்

பிறகு அல்லது 1949-இல் திராவிடர் கழகத்துக்குள் மிதவாதத்தினர் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் பிருமணர்களுக்கும் ஹிந்து மதத்தினருக்கும் ஆதரவு கொடுக்க ஆரம்பித்த பிறகு பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஹிந்து மதத்தையும் அதன் கடவுள்களையும் புராண இதிகாசங்களையும் கடுமையாகத் தாக்கி விமர்சித்து பிருமணர் எதிர்ப்பு இயக்கத்தை வலிமைப்படுத்தினர். [Mr. E.V.R has thoroughly changed the trends and the attitudes of the Self Respect Movement into a fanatic 'Anti-Brahmin Movement' So, he began his drastic attack over the Brahmins, the Hindu gods & Goddesses andthe Hindu religious Literatures] எனவே, திராவிட இயக்கங்கள் அனைத்துக்கும் தந்தையாக தலைவராக வழிகாட்டி-யாக விளங்குகின்ற பெரியார் ஈ. வெ ரா. அவர்கள் 1950-க்குப் பிறகு ''பிருமணர் அல்லாதவர்களைப் [The non Brahmins] பாதுகாக்க வேண்டுமென்றால் அவர்களை ஹிந்து மதத்திடமிருந்தும் பிருமணர்களின் அண்டப் புளுகுகளும், ஆபாசக்கற்பனை-களும், சுரண்டல்மிகு சூழ்ச்சிகளும் நிறைந்த புராண இதிகாசங்களிடமிருந்தும் பிருமணர் அல்லாதவர்களுக்கு விடுதலைப் பெற்றுத்தர வேண்டும். அதுவே எனது முதல்வேலை! அதுவே எனது கடமை! அதுவே எனது கொள்கை!.........'' என்று கூற ஆரம்பித்து விட்டார். இவருடைய இந்தப் போக்கினால்தான் சுயமரியாதை இயக்கப் பாரம்பரிய தத்துவத்திலும் பண்பாட்டிலும் கலக்கம், குழப்பம், மயக்கம் முதலியவை ஏற்பட்டன. அதன் விளைவே திராவிடர் இயக்கங்கள் அனைத்தும் கண்மூடித்தனமான, அநாகரிகமான நாத்திக வெறிப்போக்கைப் பெற்று பிருமணர் அல்லாதவர்களின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் உருவாக்க முடியாமல் போய்விட்டன. அதாவது பொதுமக்களின் செல்வாக்கை இழந்து விட்டன.

4. மேற்படி, வரலாற்றுப் பேருண்மைகளை முழுமையாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாதவர்களும், குறிப்பிட்ட அளவாவது புரிந்து கொள்ள முடியாதவர்களும், இன்றைய சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய, கல்வித் துறைகளில் மிகுதியாக இருக்கின்றார்கள்! இருக்கின்றார்கள்! இருக்கின்றார்கள்! எனவேதான் 1. மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை 2. சர். பி. தியாகராயச் செட்டியார் 3. T.M. நாயர் 4. பனகல் அரசர் 5. சர் P. T. ராசன் 6. செட்டி நாட்டரசர் முத்தையாச் செட்டியார் 7. சுவாமி கைவல்யம் 8. மறைமலை அடிகள் 9. திரு. வி. க 10 தாத்தாச்சாமியார் 11. மௌன குரு 12. திருவையாறு நிர்வாண அடிகள் 13. வெட்டவெளிச் சித்தர் 14. கடவுள் ஞானியார் சாமிகள் 15. குன்றக்குடி அடிகளார் 16. திருநெல்வேலி சந்திர சேகரப் பாவலர்......... முதலிய எண்ணற்ற ஆன்மீக வாதிகள், அருளாளர்கள், மதத் தலைவர்கள், மதவாதிகள்......... தோற்றுவித்த திராவிட இயக்க உணர்வு அல்லது பிருமணர் அல்லாதாரின் ஒற்றுமையுணர்வு உருவாக்கிய மதமறுமலர்ச்சிச் செயல்கள்தான் [The Religious Renaissance attempts are the main souroe for the development of 'The Justice Party' and 'The Self Respect Movement' - taken from the writings of His Holiness Mr M. PalanisamyPillai] சுயமரியாதை இயக்கத்தையும் நீதிக் கட்சியையும் வளர்த்தன! வளர்த்தன! வளர்த்தன! அதாவது மேலே குறிப்பிட்ட எண்ணற்ற தலைவர்களின் கூட்டு முயற்சிகளின் முழுவடிவமாகவும், தலைவராகவும் திராவிட இயக்கங்களின் தந்தை எனப்படும் தமிழினத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் திகழ்ந்தார். எனவே, திராவிட இயக்கங்களின் அடிப்படையும், பாரம்பரியமும், பண்பாடும், வரலாறும், வளர்ச்சியியலும் வலிமையும், பொலிவும் நாத்திகமல்ல! நாத்திகமல்ல! நாத்திகமல்ல! கடவுள் வெறுப்பல்ல! கடவுள் வெறுப்பல்ல! கடவுள் வெறுப்பல்ல! மதமறுப்பல்ல! மதமறுப்பல்ல! மதமறுப்பல்ல!

குவலய குருபீடம்

**ஞாலகுரு சித்தர் கருவூரா**

4 இராமலிங்க அடிகளார் சிறுவனாக இருந்த பொழுதே திருத்தணியில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானை நேரில் கண்டு பேரின்பம் அடைந்து பத்தி மேலீட்டால் எண்ணற்ற அருட்பாக்களைப் பாடினார். அப்படி அவர் திருத்தணி முருகப் பெருமானைப் பாடியிருக்கும் பாடல்கள் அனைத்தும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு அருட்பா தொகுதியில் 'ஐந்தாம் திருமுறை' என்று தனிச்சிறப்புடன் பாராட்டப்படுகின்றன. அதாவது தனது ஒன்பதாவது வயதிலே அவர் இறைவனால் ஆட்கொள்ளப் பட்டதை 'ஆடையிலே எனை மணந்த மணவாளா' என்று தெளிவாகக் குறிக்கின்றார். இதே போல அவர் தான் கண்ணாடியில் கண்ட முருகப் பெருமானின் வடிவை ''ஆறுமுகங்கள், கடம்பமாலை தாங்கிய பன்னிரு தோள்கள்'; தாமரை மலர் போன்ற இருதாள்கள், கையில் கூர்கொண்ட ஒரு வேல், தாங்கு -கின்ற பெருமையைப் பெற்ற மயில் கோழிக் கொடி'' என்று வருணித்துள்ளார். இதேபோல இவர் திருவெற்றியூரிலுள்ள ஈசுவரனும் (புற்றீசர்) ஈசுவரியும் (வடிவுடை மாணிக்கவல்லி) தனக்கு அருள் புரிந்ததை மிகத்தெளிவாக எண்ணற்ற அருட்பாக்களால் பாடியுள்ளார். இப்படி இவர் திருவொற்றியூரி -லுள்ள ஈசுவரனுக்காகவும் ஈசுவரிக்காகவும் பாடிய பாடல்களின் தொகுதிதான் இவர் பாடிய பாடலின் ஆறு திருமுறைகளில் இரண்டாவது திருமுறையாகத் தொகுக்கப் பட்டுள்ளன. இதில் சிறப்பாகக் குறிக்கப் பட வேண்டியது என்ன வென்றால் ஒருமுறை இந்த வடிவுடை மாணிக்கவல்லி அம்மையார் அவர்கள் பசியோடு வீட்டுத் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த இராமலிங்கரை எழுப்பி நெய்ப் பொங்கல் சோறு வயிறு நிறைய உண்ணுவதற்காக வழங்கியதாக அவரே குறிக்கின்றார். இதே போல் இவருடைய அருட்பாக்களில் சிவபெருமானே நேரில் வந்து இவர் உண்ணுவதற்காக 'தெள்ளமுதம்' வழங்கியதாகக் குறிப்பிடு -கின்றார். ஆனால் இப்படியெல்லாம் பல கடவுள்களை நேரில் பார்த்த இவர் தமது கடைசிக் காலத்தில் உருவமே இல்லாத அருட்பெருஞ் சோதிதான், அருட்பெருஞ்சுடர் தான், விளக்கொளி தான், கற்பூரச் சுடரொளிதான்... ......கடவுளென்று கூறிச் சென்றுவிட்டார். இதனால் தணிகை மலையிலும் திருவொற்றியூரிலும், சிதம்பரம். சிவபெருமானின் திருநடனப் பெரிய கோயிலிலும் இவருக்குக் -கிடைத்த கடவுட்காட்சிகள் கதைகளாக, கற்பனைகளாக, பயனற்றவைகளாகப் போய் விட்டன. இப்படி இவர் கடவுள்களை உருவத்தோடு நேரில் கண்டு பழகி உணர்ந்தும் கூட உருவ வழிபாடு தேவையில்லை என்பது போல அருட்பெருஞ்சோதி வழிபாடு என்ற ஒரே ஒரு வழிபாட்டை மட்டும் வலியுறுத்திச் சென்று விட்டார். இவர் இப்படித் தமது கடைசிக்காலத்தில் ஒரு குழப்ப வாதத்தை உருவாக்கி விட்டுச் சென்றிட்ட காரணத்தினால் தான் இவருடைய போதனையோ, சாதனையோ, வாழ் வியலோ தமிழகத்திற்குள் கூட முறையான நிறையான வளர்ச்சியைப் பெறமுடியவில்லை. இவரைப் பின்பற்றுகிறவர்களும் வறட்டு வேதாந்திகளாகவும், வெறும் பாராயணப் பித்தர்களாகவும், சன்மார்க்கச் சங்க நிறுவன நிர்வாகக் கட்டமைப்போ, ஒழுங்கமைப்போ இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

5 மேற்படி இராமலிங்கரைப் போலவே இராமகிருட்டிணப் பரம அம்சரும் கல்கத்தாவில் தட்சிணேசுவரத்தில் உள்ள காளி கோயிலில் காளியை நேரில் பார்த்துப் பழகியும் கூடத் தமது கடைசி காலத்தில் ஆரிய சமாசம், பிரம்ம சமாசம்.........முதலியவற்றின் கருத்தோட்டங்களுக் கேற்ப அருவுருவங்களை வழிபடும் அத்வைத கருத்துக்களைக் கூறிச் சென்றிட்டார். அதாவது உருவத்தோடும், உடலோடும், உயிரோடும், உணர்வோடும் நேரில் தோன்றித் தன்னோடு பழகிய காளி தேவியையே மறந்தும் துறந்தும் மறைத்தும் அத்வைதக் கருத்துக்களைக் கூறிச் சென்று விட்டார். இதனால் அவர் வழிபட்ட காளி தேவி கோயிலும், தாந்தரீகப் பூசைகள் பல செய்து சித்தி பெற்ற தட்சிணேசுவரம் பஞ்சவடியும் வரலாற்றுச் சிறப்பையோ அருளுலகச் சிறப்பையோ மத முதன்மையோ பெறமுடியாமல் போய்விட்டன. இவர் பெயரால் உலகெங்கும் எண்ணற்ற நிறுவனங்கள் தோன்றியுங்கூட ஆயிர மாயிரம் துறவிகள் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டும்கூட இவர் போல ஒருவர் கூட காளிதேவியைக் காணமுடியவில்லை. அருளூற்றாக மாறமுடியவில்லை.

6 இராமலிங்க அடிகளாரின் பத்தர்களாக ஆயிரமாயிரம் பேர் ஒரு நூற்றாண்டுக்கு மேல் வாழ்ந்தும் கூட ஒருவர் கூட இராமலிங்க அடிகளைப் போல் கடவுளை நேரில் பார்க்கும் தகுதியைப் பெறவில்லை. இதே நிலைதான் இராமகிருட்டிணரின் பெயரால் ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஆயிரமாயிரம் துறவிகள் வாழ்ந்தும் கூட ஒருவர் கூட காளிதேவியைக் காண முடியவில்லை. இம்மாபெரும் தோல்வி இவ் விருவருக்கும் ஏன் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? எதற்காக ஏற்பட்டது? எவ்வாறு ஏற்பட்டது? எவரெவரால் ஏற்படுத்தப் பட்டது? இத்தோல்வியை வெற்றியாக்க முடியுமா? அதற்கு என்னென்ன செய்ய வேண்டும்? அல்லது நாத்திகர்கள் கூறுவது போல் மேற்படி இருவரும் கற்பனை வாதிகளா? அல்லது கடவுள் பத்தர்களா? ஒரு நூற்றாண்டு காலமாகியும் வாரிசுகளை உருவாக்க முடியாது செத்துப் போன சொத்தை வித்துக்களையா தத்துவமாக வழங்கிச் சென்றார்கள் மேற்படி இருவரும்........என்று எண்ணற்ற வினாக்களை கடலலை போல் தொடர்ந்து எழுப்பிச் சிந்தித்து விடைகாண முடியாமல் ஏங்கித் தவித்து அலைந்து திரிந்து சிந்தை வெந்து நெஞ்சம் நைந்து செய்வதறியாது திகைத்து நிற்கும்

எண்ணற்ற மெய்யன்பர்களின் இருள் நிறைந்த அருளுலக வாழ்வில் பேரொளிப் பிழம்பாய் மெய்ஞ்ஞானச் சோதியாக பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதம் வெளித்தோன்றியுள்ளது. அதாவது மெய்யான இந்து மதமெனும் ஆதவனை மூடியிருந்த கார் மேகங்களைப் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் கருவூரரின் அருட்பணி எனும் காற்று அகற்றி விட்டது. (தொடரும்)

# இந்து மதம் - ஹிந்து மதம் விளக்கக் கட்டுரைத் தொடர்-8

அதாவது, பதினெண் சித்தர்கள். மிகத் தெளிவாக விஞ்ஞானச் சூழலிலும், பகுத்தறிவுப் போக்கிலும், [With a Scientific atmosphere and a Rationalistic approach] உலகின் தோற்றத்தை -யும், பயிரின உயிரின தோற்றத்தையும், கூறுகிறார்கள். இப்படிப்பட்ட பகுத்தறிவுப் போக்கும், விஞ்ஞானச் சூழலும், உடையதுதான் சித்தர்களின் இந்து மதம், அதாவது, மெய்யான இந்து மதம் என்று சொல்லப்படும் பதினெண் சித்தர்களின் இந்து மதம் முழுக்க முழுக்க அன்றாட நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய ஒரு சமூக விஞ்ஞானமே இது ஒரு பகுத்தறிவுத் தத்துவமே; இது ஓர் அறிவியல் மதமே. ஆனால், வட ஆரியர்களின் ஹிந்துமதம் காட்டுமிராண்டித்தனமான கற்பனைகளையும், ஆபாசங்களையும், பொய்களையும், பயனற்றவைகளையும், தேவையற்றவைகளையும் மிகுதியாக உடைய ஒன்று. இப்பேருண்மையினை ஹிந்து மதத்தின், அதாவது, பிருமண வேதமதத்தின் கருத்துக்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**உலகம் பற்றியும் உயிரினம் பற்றியும் ஹிந்து மதம் கூறுவன:**

'பிரமன் தன்னால் தோற்றுவிக்கப்பட்ட மானஸ புத்திரர்களால் சிருஷ்டித் தொழில் நடக்காத -தால் பிரம்மனே சுவயம்புமனு எனும் ஆணாகவும், சத்ருபை எனும், பெண்ணாகவும் உருவெடுத்து மனித இனத்தை உருவாக்கினான். இவ்வாறு சிருஷ்டி தொடங்கியது' —இப்படி அறிவுக்குப்புறம் -பான கற்பனைக்கட்டுக் கதைகளைக் கூறுகிறது பிருமணர்களின் பொய்யான ஹிந்து மதம்.

முடிவுரை:- விரிவஞ்சி இக்கட்டுரையை இத்துடன் நிறைவு செய்ய நேரிடுகின்றது அதாவது இன்றைய 12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களுக்கு கிடைக்கின்றன ஓய்வு நேரத்தை இதற்கு மேல் செலவழிக்க அவரால் இயலாது எனவே, இக்கட்டுரையிலுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு சித்தர் நெறி அடியானும், அடியாளும், அடியாரும், சிந்தித்து பல கட்டுரைகளையும், நூல்களையும் எழுத வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

குருதேவர் தரும் செய்திகள் அனைத்தும், சிந்தனையைத் தோற்றுவித்து ஊக்குவிக்கும், ஆற்றலுடையவையே [Our Guru's ideas are thought provoking] என்பதை அனைவரும் மெய்யாக்க வேண்டும். தலைவர் என்பவர் அறிவுணர்ச்சி ஊற்றாக [The spring of inspiring ideas] கருத்துக்களை வழங்கிக் கொண்டேயிருந்தால்தான் எங்கும் கொள்கை செழித்துக் கொழித்துப் பசுமையாக வளர்ச்சி பெற முடியும்.

நாம் வரலாற்றுப் பூர்வமாகவும், இலக்கியப் பூர்வமாகவும், தத்துவப் பூர்வ மாகவும், அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் இந்து மதத்துக்கும் ஹிந்து மதத்துக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கியுரைக்க வேண்டும். சொற் பொழிவாற்ற வேண்டும்; புத்தகமாக அச்சிட்டு வழங்க வேண்டும். இல்லாவிட்டால் நம்மால் எதுவுமே செய்ய முடியாது நம்மை நாத்திகர்களும் இருட்டடிப்புச் செய்து, எதிர்த்தழிக்கப் பார்க்கிறார்கள். பொய்யான ஹிந்து மதத்தை நம்பியேற்று நம்மை இருட்டடிப்புச் செய்தும், அழித்தொழிக்கப் பார்க்கிறார்கள். தன்னல வெறிபிடித்த சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல்வாதிகள் போலியான ஹிந்து மதத்தின் மூலம் மக்களை மடையர்களாகவும், தன்மானம் அற்றவர்களாகவும், தன்னம்பிக்கையற்றவர் -களாகவும், ஒற்றுமையில்லாதவர்களாகவும், சிந்தனையில்லாதவர்களாகவும் எவ்வித மான மொழிப்பற்றோ நாட்டுப் பற்றோ பெற்று விட முடியாதவர்களாகவும், கோழை -களாகவும், ஏமாளிகளாகவும், அடிமைகளாகவும், தயாரித்துத் தாங்கள் சுகவாழ்வு வாழுகிறார்கள். எனவே, இன்றுள்ள சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல் தலைவர் -கள் அனைவருமே நம்மைத் தாழ்த்தவும், வீழ்த்தவும், இழிக்கவும், அழிக்கவும், இருட்டடிப்புச் செய்யவும், பிருமணர்களோடு சேர்ந்து செயல்படுபவர்களாகவே இருக்கிறார்கள். எனவேதான், நமது உடனடி முயற்சியாக மெய்யான இந்து மதத்துக்கும் பொய்யான ஹிந்து மதத்துக்கும் உள்ள வேறுபாடுகள் விளக்கி யுரைக்கப்பட்டு வருகின்றது. (முற்றும்)



# இந்தியாவில் மார்க்சீயம் - 8

–சித்தர்

1861 ஆகசுட்டுத் துவக்கத்தில் வட அமெரிக்காவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் அடிமை வாணிகத்தின் பொருட்டு எதிராக 'லிங்கன்' காலத்தில் நடைபெற்ற போரை ஆதரித்து இருவரும் பல கட்டுரைகள் எழுதினர்கள். அவை வியன்னாவில் உள்ள முற்போக்கு ஏடான 'பதிப்புகள்' என்பதிலும் பிறவற்றிலும் வெளியாயின. இப்பணி 1863 சூன் வரை நீடித்தது எனலாம். இதற்கிடையில் 1863 சனவரியில் எங்கெல்சின் மனைவி 'மேரி பர்ன்சு' இறந்தார். இந்நிகழ்ச்சி இருவரின் நட்புப் பாலத்தின், நட்பு என்னும் கோட்டையின் அடிப்படை உறுதியை மேலும் வலிவுள்ளதாக ஆக்கியது எனலாம் இந்நிகழ்ச்சிக்குப் பின்னதாக சூலைமாதம் துவக்கம் இரண்டாண்டுகள்வரை தனது ஒப்பற்ற கைவண்ணமான 'மூலதனம்' என்ற நூலுக்கான குறிப்புக்களைத் தொகுக்கத் துவங்கினர். மேலும் வடிவப் படுத்தி அச்சிட்டு வெளியிடுவதில் முயற்சிகள் பல மேற்கொண்டார் இவர் தனது தத்துவங்களுக்கு ஒரு செயல் வடிவம் தந்திட முனைந்தார். 1864 செப்டம்பர் 28 இல் 'முதலாவது இண்டர் நேசனல்' என்ற பெயரில் உருவாக்கினர். இது இலண்டனில் 'செயிண்ட் மார்ட்டின்' மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 'சர்வதேசத் தொழிலாளர் சங்கம், என்று பொருள்பட உருவாக்கப்பட்டது. இதன் இடைக்கால ஆட்சி மன்றக் குழுவில் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் கார்ல் மார்க்சு.

மார்க்சு விரைந்து இரவுபகலாக முயன்று அக்டோபர் 21-27 இல் சர்வதேசத் தொழிலாளர் ச்ங்கத்தின் ''இடைக்கால விதிகள்'' என்பதனையும், இச்சங்கத்துக்குரிய ''துவக்க உரை'' என்பதனையும் தயாரித்தார். அதில்...... தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமையை ஆக்கிரமிப்புப் போர்களுக்கு எதிரான ஒரு சக்தி வாய்ந்த தடைமதிலாக மார்க்சு விவாதித்தார். கார்ல் மார்க்சும், எங்கல்சும் 1865 சனவரி இறுதியில் தங்களது புரட்சிக்கொள்கையைச் செர்மனியில் பரப்பிடப் பயன்படுத்திய ''சோசியல் டெமக்ராடிக்'' ஏட்டின் ஆசிரியர், 'லசுசாலியன் சிவேய்தசர்' புரட்சிப் போக்கின்றிப் 'பிசுமார்க்கை' ஆதரித்தார் என்பதற்காக அந்த ஏட்டிலிருந்த தொடர்பனைத்தையும் செப்டம்பர் 23 ஆம் தேதியில் முறித்துக் கொண்டனர். பின்பு 1865 சூன் 20-27 ஆகிய இரு தேதிகளில் மார்க்சு தனது புகழ்மிக்க 'கூலி, விலை, இலாபம்' என்ற தலைப்பில் அறிக்கைகளைச் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் படித்தார். மேலும் அதில்......... மனிதன் இழிவுப் படுத்தப்பட்ட, அடிமைப் படுத்தப்பட்ட அனாதையாக்கப்பட்ட கேவலமான பிராணியாக ஆக்கப்பட்ட 'சகல உறவுகளையும் ஒழிப்பது' தான் பாட்டாளி வர்க்கத்தின், வர்க்கப் போராட்டத்தின் மெய்யான மனித நேய நோக்கம் என்று அவர் வரையறுத்தார்..... மேலும் ...... மதிப்பு உருவாவதின் தர்க்கவியல் ரீதியான பொருளாதார ஏற்பாட்டை விவரிக்கையில் மார்க்சு, கூலியில் உயர்வு ஏற்படுவதால் அடக்க விலையைப் பாதிக்க முடியாது என்று காட்டினர். இதனால் செப்டம்பர் 25-29 இல் இலண்டனில் நடந்த சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாட்டில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டனர்.

பின்னர்தான் 1867 மார்ச்சுக்குள் மார்க்சு தனது நாற்பதாண்டு கால உழைப்பின் பிரதிபலிப்பான 'மூலதனம்' நூலின் முதல் தொகுதியை இறுதியாகச் சரி செய்து பதிப்பித்து முடித்து அச்சிடத் தயார் செய்தார். ஏப்பிரல் மாத கால இடைவெளி மார்க்சு ''புருதோனியர்களுக்கு எதிராக மாபெரும் போராட்டத்தைச் சர்வதேசத் தொழிலாளர் குழுவில்'' நிகழ்த்தினர். எங்கல்சு மார்க்சை ஆதரித்து ''போலந்து விவகாரத்தில் தொழிலாளி வர்க்கம் செய்வதற்கு என்ன இருக்கிறது''...... என்ற தலைப்பில் பல கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினர். இவருடைய உலகக் கண்ணோட்டத்தையும், உலகத் தொழிலாளர் இயக்கச் செயல் முறைச் சிந்தனைகளை மிகத்தெளிவாக விளக்கக் கூடிய வாய்ப்பு ஒன்று வெளிப்பட்டது.

(தொடரும்)

---

தொடர்பு; சி. கவிக்குமார் B.sc, தலைமைப் பொறுப்பாளர்,
56, N G O காலனி, பொன்னேரி-601204.

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி.